**கருவலகஸ்வெவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 20 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து கருவலகஸ்வெவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொது களஞ்சிய மீதி ரூபா 2,685 தொகை கைவிடப்பட்டிருந்ததுடன், மின்சார இருப்புக் களஞ்சிய மீதி ரூபா 37,250 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கைத்தொழில் கடன்பட்டோர் ரூபா 309,252 இனால் அதிகரித்து கணக்கு வைத்தமையால் கடன்பட்டோர் அந்த தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதிகளின் ரூபா 15,427,139 கூட்டுத்தொகை மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,775,207 ஆகும்.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 120,375,331 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 (2) (அ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள், முத்திரைக் கட்டணம் மற்றும் குத்தகை வாடகை ஆகியவற்றை உரிய முறையில் அறவிடுவதற்கும் 158 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார எல்லையினுள் ஆதனவரியினை செலுத்தாமல் புறக்கணிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் விதி (நிதி மற்றும் நிர்வாகம்) 5(7) மற்றும் விதி 217 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமான ரூபா 58,100 பெறுமதியான 14 வைப்புக்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,368,661 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,935,974 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

**செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் உரிய விலகல்களுடன் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | |
| ஆளணி வேதனங்கள் | 22,434 | 17,707 | 4,727 |

| | | | |
|---|---|---|---|
| ஏனையவை | 7,943 | 6,828 | 1,115 |
| உப கூட்டுத்தொகை | 30,377 | 24,535 | 5,842 |
| மூலதன செலவினம் | 101,589 | 9,236 | 92,353 |
| **மொத்தம்** | **131,966** | **33,771** | **98,195** |

## 2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் சபையின் செயற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| 2015 | | 2014 | |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | **நடைமுறைப் பொறுப்புக்கள்** | **நடைமுறைச் சொத்துக்கள்** | **நடைமுறைப் பொறுப்புக்கள்** |
| 1.52 | 1 | 1.36 | 1 |

அதன் பிரகாரம் செயற்படு மூலதனத்தில் நல்லதொரு முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வருமான சேகரிப்பிலான செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான சபையின் வருமானச் சேகரிப்பிலான செயலாற்றல் பின்வருமாறாகும்.

| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை** |
|---|---|---|---|
| | **ரூபா (000)** | **ரூபா (000)** | **ரூபா (000)** |
| வீதவரியும் வரியும் | 535 | 334 | 201 |
| வாடகை | 607 | 537 | 70 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 718 | 734 | (16) |
| சேவைக்கான கட்டணம் | 1,032 | 900 | 132 |

**நீர் வரி**
-------------

| | | | |
|---|---|---|---|
| - கருவலகஸ்வெவ | 559 | 477 | 82 |
| - இபலோகம | 1436 | 1,481 | (45) |
| - மொத்த நீர் செயற்திட்டம் | 420 | 303 | 117 |

**2.4.2 வீதவரியும் வரியும்**
-------------------------------

கடந்த வருடத்தில் 29 சதவீதமாக இருந்த வீதவரியும் வரியின் நிலுவை மிளாய்வாண்டின் போது 38 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

**2.4.3 வாடகை**
--------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 72,300 தொகையான வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவற்றில் ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 34,700 ஆனமையால் ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை ரூபா 69,500 ஆக இருந்தது.

**2.4.4 நீர் வரி**
-------------

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியிள் உள்ளவாறு கருவலகஸ்வெவ மொத்த நீர்ச் செயற்திட்டங்களின் நிலுவைகள் முறையே ரூபா 127,000 மற்றும் ரூபா 117,000 ஆக இருந்துடன், முன்னைய ஆண்டில் பட்டியலிடப்பட்ட தொகையில் 3 சதவீதம் மற்றும் 21 சதவீதமான நிலுவை இந்த வருடத்தின் பட்டியலிடப்பட்ட தொகையில் 23 சதவீதம் மற்றும் 29 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

**2.4.5 நிதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**
--------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீதிமன்ற தண்டப்பணங்கள்
---------------------------------------------

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட நீதிமன்ற தண்டப் பணங்கள் ரூபா 4,000,000 ஆக இருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் சனவரி முதல் செப்தம்பர் மாதம் வரையிலும் ரூபா 1,394,669 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) முத்திரைக் கட்டணம்
----------------------------------

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,000,000 ஆக இருந்த போதிலும், 2014 மே மாதம் முதல் 2015 திசெம்பர் மாத இறுதி வரை முத்திரைக் கட்டணங்கள் கணிப்பிடப்பட்டு பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

03. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

ZA - 5261 இலக்கம் கொண்ட போடன் வகையிலான பெக்கோ லேடர் மற்றும் ZA – 5338 இலக்கம் கொண்ட மோட்டர் கிரேடர் மூலம் வருமானம் ஈட்டியிருந்த போதிலும், அவற்றின் ஓட்டக்குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

மீளாய்வாண்டின் ரூபா 41,614 பெறுமதியான 229 வாசிகசாலைப் புத்தகங்கள் தொலைந்து போயிருந்த போதிலும், குறித்த நட்டம் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு ரூபா 500,000 வரையிலுமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) கைத்தொழில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவானது துறை தொடர்பான அறிவுடைய வெளிவாரி நபரொருவரையும் கொண்டிருக்க வேண்டியதுடன், சபையின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவானது சபையின் உத்தியோகத்தர்கள் மூவரை மாத்திரம் கொண்டிருந்தது.

3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்

ரூபா 1,338,227 செலவிடப்பட்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு 2014 ஆம் ஆண்டின் நவம்பர் 06 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த திண்மக் கழிவு மீள் சுழற்சிக் கட்டிடத்தை விளைவுடையதாக பயன்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டுகளின் மதிப்பீட்டு தரவுகள், உள்ளபடியான செலவினங்கள் மற்றும் முன் அனுபவங்கள் ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ளாமல் மிகை/குறை ஒதுக்கங்கள் இடம்பெற்றிருந்தமையால் பாதீடானது செலவினக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

2015 ஆம் ஆண்டிற்கான ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத் தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

(i) சுமார் 46 ஹெக்டேயர் பரப்பளவான 63 காணித்துண்டுகள் நீண்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், அவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2013 – 2015 வரையான ஆண்டுகளில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 06 வாகனங்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

ரூபா 16,914,920 பெறுமதியான 06 கட்டிடங்கள் மற்றும் முறையே ரூபா 145,000 மற்றும் ரூபா 10,000 பெறுமதியான கள்களை அரைக்கும் இயந்திரம் மற்றும் தயாரிப்பு அச்சு ஆகியன நீண்டகாலமாக எதுவிதப் பாவனைக்கும் எடுக்கப்படாமல் இருந்தது.

**4.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 13,069,499 தொகையான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 42,558 தொகையான கணக்கு மீதிகள் 3 வருட காலத்தைக் கடந்திருந்தது.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

---

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

---

சபையின் செயலாளர் பதவியானது பல வருடங்களாக வெற்றிடமாக நிலவுவதுடன், இரண்டாம் நிலையிலான 07 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையிலான 06 பதவி வெற்றிடங்கள் நிலவின.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு